பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 55

திங்கட்கிழமை
20 ஜனவரி 2025

தை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 20
யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் 650 மில்லிகிராம் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞11

# படையினரின் சில ஆயுதங்கள் பாதாளக் குழுக்களின் வசம்!

### நாட்டில் பயங்கரமான நிலைமை ஆயுதங்களை மீட்போமென அநுர சூளுரை



**கொழும்பு, ஜனவரி 20**
**இராணுவத்தினர் வசம் இருந்த சில ஆபத்தான ஆயுதங்கள், பாதாளக் குழுக்களிடம் சென்றுள்ளன. அத்துடன், பாதாளக் குழுக்களிடம் பணம்பெற்று துப்பாக்கிச்சூடு நடத்துபவர்களும் இராணுவத்துக்குள் இருக்கவே செய்கின்றனர் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.** ☞11

## சீனாவின் முதலீடுகளால் இலங்கைக்கு ஆபத்தே!

### கடன்சுமைகள் அதிகரிக்கும் இந்தியத் தூதுவர் எச்சரிக்கை



கொழும்பு, ஜனவரி 20
நாடொன்றின் நிலைபேறான எதிர்காலத்தை உறுதிப்படுத்தாத சீனாவின் முதலீடுகளால், கடன்சுமைகளே அதிகரிக்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ☞11

## ஜனவரி 27ஆம் திகதி யாழ். வருகிறார் அநுர?

யாழ்ப்பாணம், ஜன. 20
எதிர்வரும் 27ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ☞11

## மஹிந்தவின் வீடு மீளப் பெறப்படும்!

### ஜனாதிபதி அநுர விடாப்பிடி

கொழும்பு, ஜன. 20
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தங்கியுள்ள, மாதம் 46 லட்சம் ரூபா வாடகைப் பெறுமதியுடைய, அரச விதிவிடம் மீளப்பெறப்படும் என்று ஜனாதிபதி ☞11

## முன்னாள் எம்.பி.க்களின் ஓய்வூதியத்துக்கும் ஆப்பு

கொழும்பு, ஜன. 20
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியம் வெகுவிரைவில் இரத்துச் செய்யப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞11

## சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் மறைந்தார்



கொழும்பு, ஜன. 20
சிரேஷ்ட ஊடகவியலாளரும், 'ராவய' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான விக்டர் ஐவன் (வயது-75) நேற்றுக் காலமானார்.
அச்சமற்ற செய்தி அறிக்கையிடல், கூர்மையான வர்ணனைக்கு பெயர்பெற்ற ☞11

## பொலிஸ் காவலில் இருந்த சந்தேகநபர் உயிரிழப்பு

### மர்ம மாத்திரைகள் இறப்புக்குக் காரணமா? மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20
வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார். அவர் சந்தேகத்துக்கு இடமான மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டமையால் இறப்புச் சம்பவித்திருக்கலாம் என்று உடற்கூற்றுப் பரிசோதனை ☞11

## முன்னாள் அமைச்சர் விஜயமுனி கைது!

கொழும்பு, ஜன. 20
முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா மோசடித் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள் ☞11

### போலி ஆவணங்கள் மூலம்

## அரச காணியில் மோசடி அரச அலுவலர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 20
அரச காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்கள் தயாரித்து 22 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் ☞11

## அதிகாரத்தை பகிரக்கூடாது!

### தம்மரதன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 20
நாடும், அதிகாரமும் ஒன்றாகும். எனவே, அதிகாரத்தைப் பலப்படுத்த வேண்டுமேதவிர அதனைப் பகிரக்கூடாது என்று பேராசிரி ☞11



முச்சந்தி முரளி

'அப்ப உந்த ஆமிக்காரர் ஆயுதத்துக்கும் காவல் பாதாளக்குழுவுக்கும் தோழன் என்குறாரோ அநுர?'



## இ.போ.ச. அசமந்தம்; மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 20
பயணிகளை நடுவீதியில் அந்தரிக்கவிட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ் சாலையின் அசமந்தப் போக்கைக் கண்டித்து பொதுமக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினார்கள்.
யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கைப் ☞11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
15 EDITION
JANUARY ஜனவரி
24 25 26
JITF 2025
15th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்னும் 4 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலிலிருந்து நழுவ இலங்கையை அனுமதிக்காதீர்

## சட்டத்தரணி அம்பிகா சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன.20**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையானது ஏதேனுமொரு மட்டத்தில் தொடரவேண்டியது அவசியம்.**

இவ்வாறு சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகி, ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் காலநீடிப்புச் செய்யப்பட்ட 57/1 தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவுக்குவருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையை எவ்வகையிலேனும் தொடரவேண்டியது அவசியம்.

ஏனெனில் இலங்கையில் மீறல்கள் எவையும் இடம்பெறவில்லை என அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறிவருவதை நிராகரிக்கும்பொறிமுறையாக இதுவே இருக்கிறது- என்றார். (ச-இ)

# இலங்கை வரும் பிரிட்டன் செயலர்



கொழும்பு, ஜன.20

பிரித்தானியாவின் இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுச் செயலர் கத்தரின் வெஸ்ட் இரண்டுநாள் உத்தியோகபூர்வமான பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு வருகைதரும் அவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சில பிரதான அரசியல்கட்சிகளின் பிரதான பிரமுகர்களையும் சந்திக்கவுள்ள அவர், சிவில் அமைப்புகளின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, வடக்கு மாகாண ஆளுநர், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். வர்த்தக சங்கத்தினர் மற்றும் சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜாவுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ள அவர், யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள தரைக்கீழ் நீர் மற்றும் காலநிலைமாற்றம் சம்பந்தமான நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார். (ச-இ)

# கதிரைச் சின்னத்தில் கூட்டணியாக சு.க.

கொழும்பு, ஜன.20

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் கதிரைச் சின்னத்தில் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட தரப்பின் தலைமையில் இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்னாள் அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாபா, சுசில் பிரேம்ஜயந்த, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, நிமல் லான்சா, பியல் நிஷாந்த டி சில்வா, பைசர் முஸ்தபா மற்றும் பிரேம்நாத் சிதொலவத்த உள்ளிட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றனர். (ச-இ)

# ஐக்கிய தே.கட்சி இன்று கூடுகிறது

கொழும்பு, ஜன.20

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு கட்சிச் செயற்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கிடையிலான ஒன்றிணைவு தொடர்பிலேயே இதன்போது விரிவாக ஆராயப்பட்டு, இறுதி முடிவுகள் எட்டப்படவுள்ளன.

அத்துடன், கட்சி மறுசீரமைப்புத் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளது. (ச-44)

# கல்கிசையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜன.20

கொழும்பு கல்கிசை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதில் கல்கிஸை 2ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த சவிந்து தரிந்து (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மற்றொரு நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# குழந்தை கொலை தாயார் கைது!

கொழும்பு, ஜன.20



ஹபரணைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பளுகஸ்வெவப் பகுதியிலுள்ள வீடொன்றில் பத்து மாதம் நிரம்பிய ஆண் குழந்தை யொன்றை கொலை செய்த குற்றச்சாட்டில் குழந்தையின் தாயார் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தந்தை வீட்டிலிருந்து வெளியே சென்றபோது வீட்டுக்குப் பின்னாலுள்ள நீர் நிரம்பிய குழியில் பிள்ளையை நீரில் அமிழ்த்தி கொலை செய்தேன் என குழந்தையின் தாய் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி

யாழ்ப்பாணம்,ஜன.20

இந்தியாவிலிருந்து 15 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு அடுத்த வாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என இலங்கை அரசு வர்த்தகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்பு 30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு இலங்கைக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு உப்பு இறக்குமதி செய்ய இரண்டு இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை அரச வர்த்தக மற்றும் இதர பொருள்கள் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

### சுபிரி தன சம்பத (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0429 | O | 1 9 1 3 8 3 |

### Super Ball (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2695 | R | 36 38 51 65 |

### சனிதா (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | Y | 62 68 69 73 | 4856 |

### SASIRI (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0604 | 34 38 50 |

### லக்ன ராசி (DLB)

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | கன்னி | 09 25 47 61 | 4407 |

### KAPRUKA (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | E | 04 | 11 33 67 74 | 1871 |

### அத கோடிபதி (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2025 | ஞாயிற்றுக்கிழமை | Z | 27 33 44 62 | 2521 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய முதலீடுகள் சீனாவால் இல்லை

## சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன.20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீனா விஜயத்தின்போது புதிய முதலீடுகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதி சீனாவுக்குச் சென்று புதிய திட்டங்கள் தொடர்பில் எவ்வித உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவில்லை.
அநேகமான திட்டங்கள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டவையே. 2011 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆட்சிக் காலத்திலும் எண்ணெய் சுத்திகரிப்பு தொடர்பில் பேசப்பட்டது.
முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிக் காலத்திலும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பில் சீனாவுடன் பேசப்பட்டது.
அதேவேளை, இலங்கையை ஹொங்கொங் போன்று தனது மாநிலமாக மாற்றிக்கொள்ள சீனா முயற்சிப்பதாக அன்று கூறிய தலைவர்கள், இன்று சீனாவுக்குச் சென்று முதலீடுகள் கிடைத்துள்ளதாகக் கூறுவது நகைப்புக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# சுத்தம் செய்யப்படும் களஞ்சியசாலைகள்

கொழும்பு, ஜன.20
எதிர்வரும் பெரும்போக அறுவடைக்குத் தயாராகும் பொருட்டு இலங்கை இராணுவம் நாடு தழுவிய ரீதியில் நெல் களஞ்சியசாலைகளைச் சுத்தம்செய்தல் மற்றும் புனரமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான 209 களஞ்சியசாலைகளைத் தயார்செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவின் வழிகாட்டலின் கீழ் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 'அஸ்வெசும' 2ஆம் கட்டம் பணிகள் நாளை ஆரம்பம்

கொழும்பு,ஜன.20
'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்படவுள்ள பயனாளிகள் தொடர்பாக இரண்டாம் கட்டப் பதிவுக்கான பணிகள் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் அனைத்துப் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. ஒவ்வொரு விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்கு அலுவலர்கள் வருகைதந்து தகவல் கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.
குடும்பத்தின் சகல அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட தகவல்களை உறுதிப்படுத்த ஆவணங்களைத் தயாராக வைத்திருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# மருந்து உற்பத்தித்திறன் துரிதமாக்க நடவடிக்கை

கொழும்பு.ஜன.20
நாட்டுக்குத் தொடர்ச்சியாக தட்டுப்பாடுகள் இன்றி மருந்துகளை வழங்குவதற்காக அடுத்த இரண்டு வருடங்களில் உற்பத்தித் திறனை துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
மருந்து உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தேவையான மூலப் பொருள்களை உடனடியாக இறக்குமதி செய்வதில் உள்ள சிக்கல்கள் களையப்படும். அத்துடன் ஒவ்வொரு நகரத்தையும் உள்ளடக்கும் வகையில் அரச மருந்தகச் சங்கிலியின் கிளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றுக்கு, வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 120 9998

# சட்டமா அதிபர் திணைக்களத்தில் வெற்றிடங்கள்

கொழும்பு.ஜன.20
இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பெருமளவான பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2023 செயல்திறன் அறிக்கையில், 2023 டிசெம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி, திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் பட்டியல் 1,295 ஆகும். எனினும் அந்தப் பதவிகளில் 671 மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இதனால் 624 வெற்றிடங்கள் உள்ளன.
இந்தநிலையில், குறித்த பணியாளர் வெற்றிடங்கள், திணைக்களத்தின் செயற்றிறனை நேரடியாகப் பாதித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)




முந்தின காலத்தில பள்ளிக்கூடங்களில ரீச்சர்மார், பிள்ளையளுக்கு அடிக்காமல் வித்தியாசமான பணிஷ்மெண்டுகள் குடுப்பினம். அதில ஒண்டு 'இருத்தி எழுப்பிறது' . ரீச்சர் இரு எண்டு சொன்னால் இருக்கோணும், நில் எண்டா நிக்கோணும். இப்பிடியே ரீச்சர் தன்ர வாய் உளையும் மட்டும் சொல்லிக்கொண்டிருக்க, பிள்ளையளும் நாரிமுறிய முறிய இருக்கிறதும் எழும்பிறதுமா இருப்பினம். ரீச்சரின்ர கோபம் குறைய 'இரு, எழும்பு' எண்டு சொல்லிறதையும் விட்டிடுவா. அதுக்குப்பிறகுதான் பிள்ளையள் நிம்மதியாக் கதிரையில இருக்கலாம். இப்பிடி ஒரு பணிஷ்மெண்ட் பொம்பிளை அமைச்சர் ஒராளுக்குக் குடு பட்டதெண்டு சொன்னால் நீங்கள் நம்புவியளோ?

முந்தநாள் ' யாழ்ப்பாணம் கலாசார நிலையம்' எண்ட பேரை 'திருவள்ளுவர் கலாசார மண்டபம்' எண்டு பேர் மாத்துறவிழா நடந்ததெல்லோ. அந்த விழாவுக்கு அமைச்சர் சரோஜா போல் ராஜும் வேளைக்கே முன்பக்கம் போட்டிருந்த கதிரையில வந்து இருந்திட்டா. 9 மணிக்குத் தொடங்குமெண்டு சொன்ன புரோக்கிராம்,இந்தியத்தூதர் சந்தோஷ் ஜா வர லேற்றானதால 9.30க்குப் பிறகுதான் தொடங்கினது. எல்லாரையும் பார்த்துச் சிரிச்சபடி வந்த தூதுவர் முன்வரிசையில போய் அமைச்சர் சரோஜாவுக்குப் பக்கத்தில போய் இருந்தவர். அவர் இருந்த கொஞ்சத்தில தூதரகத்தில வேலைசெய்யிற ஒரு ஒப்பீஸர் போய், அமைச்சர் சரோஜாவின்ர காதுக்குள்ள ' உங்களுக்கு ஒதுக்கின கதிரை அங்கால இருக்கு அதிலபோய் இருங்கோ' எண்டு சொல்ல, அவாவும் உடன அங்கால எழும்பிப் போய் இருந்திட்டா. அக்கா எப்ப போவா கதிரை எப்ப காலியாகும் எண்டு காத்திருந்த மாதிரி அவா முதல் இருந்த கதிரையில துணைத்தூதர் வந்து இருந்திட்டார். ஆனால் சந்தோஷ் ஜாவுக்கு இப்பிடி அமைச்சரை, தூதரக அதிகாரி எழுப்பினது பிடிக்கேலை. உடனேயே அவாவைத் தனக்குப் பக்கத்தில இருந்த கதிரையிலையே இருத்தச் சொல்லி அவர் ஓர்டர் போட, பிறகு அதே தூதரக அதிகாரி அவாவைக் கூட்டியந்து கதிரையில இருத்தினவர். இப்பிடி அமைச்சரை எழுப்பிறதும், இருத்திறதுமா பள்ளிக்கூட பணிஷ்மெண்ட் மாதிரிச் செய்தது கனபேருக்கு ஒருமாதிரி இந்ததது.

வழக்கமாத் தூதரக நிகழ்ச்சியில கொழும்பில இருந்து தூதர் வந்தால், அவருக்குப் பக்கத்திலதான் துணைத்தூதரும் இருக்கிறவர். ஆனால் இது அந்தப் பெண் அமைச்சருக்குத் தெரியாது தானே. அவா புரோகிராமுக்கு முதலே வந்ததால் முன்னுக்கு இருந்த கதிரைவரிசையில ஒரு கரையா இருந்திட்டா. அப்பிடி அவா வரேக்கையே அவாக்கெண்டு ஒதுக்கப்பட்ட கதிரையைக் காட்டி அங்க இருத்தி இருந்தால், இப்பிடி ஆக்களுக்கு முன்னால அந்த அமைச்சர் அவமானப்பட்டிருக்கத் தேவையில்லையெல்லோ. இனியாவது தூதரகக்காரர் இதுகளில கவனமாயிருப்பினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகி விடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத் தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**விருச்சிகம்** : எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் உறவினர்களால் சிறு சங்கடம் ஏற்படக்கூடும்.

**மகரம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதரர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.



# இலங்கைத் தமிழர் முருகையாவுக்கு 'உலகத் தமிழ்ச் சாதனையாளர்' விருது

கோலாலம்பூர், ஜன.20

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் லண்டன் தமிழ்க் கல்வியகத்தின் நிறுவுநரும் பிரித்தானியத் தமிழ்ப் பரீட்சைச்சபையின் பிரதம இணைப்பரீட்சகருமான இலங்கைத் தமிழர் சங்கரப்பிள்ளை முருகையாவுக்கு புலம்பெயர் தேசங்களில் அவர் ஆற்றிய தமிழ்க் கல்வி வளர்சிப் பணிகளைப் பாராட்டும் முகமாக 'உலகத் தமிழ்ச் சாதனையாளர் விருது 2024' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருக்கு புலம்பெயர் தேசத்தில் தமிழ்க் கல்விச் சேவைக்கான சர்வதேச அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

பாரதியாரின் 142 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னைத் தமிழ்ச் சங்கம், உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் மலேசியத் தமிழ்ச் சங்கம் ஆகியன இணைந்து மலேசியாவில் நடத்திய மாநாட்டிலேயே அவருக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# கடலுணவுகள் விலையுயர்வு



யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையால் யாழ். குடாநாட்டு மீனவர்கள் ஆழ்கடல் சென்று மீன்பிடிப்பதைத் தவிர்த்துவருவதன் காரணமாகக் கடலுணவுகள் வந்து சேர்வது குறைவடைந்துள்ளன. அதனாலேயே சந்தைகளில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-40-17)

# சீரற்ற காலநிலையால் அறுவடை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வடக்கின் பல்வேறு மாவட்டங்களிலும் பெரும்போக நெல் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அநேகமான வயல்களில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்த நெற்கதிர்கள் காயவிடப்பட்ட நிலையில் மழை விட்டுவிட்டுப் பெய்ததனால் அவை மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சில தாழ்ந்த வயல்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் வயல்களில் விளைந்த நெல்லை அறுவடை செய்யும் பணிகளும் முடங்கியுள்ளன என்றும் என விவசாயிகள் தெரிவித்தனர். (ச-40-17)

# கணித பாடத்துக்கான இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 20

வடக்கு மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் க.பொ .த. சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாட இலவச கருத்தரங்கு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில், மன்றத்தலைவர் உமாபதி,பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கருத்தரங்கில் பிரதம அதிதியாகச் சட்டத்தரணி வசந்தசேனன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25)

# பட்டத்திருவிழா

சாவகச்சேரி, ஜன.20

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு மருதடிப் பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பட்டம் ஏற்றும் நிகழ்வு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-41-131)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்ட பணியாளர் நலனோன்புக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் தலைவராக சிவலிங்கம், உப தலைவராக பாலச்சந்திரன், செயலாளராக குகதர்சினி, நெறியாளர் உறுப்பினர்களாக ரவீந்திரன், சதீஸ்குமார், யோகேஸ்வரன், விஜியசேகர், ஸ்ரீகாந்த், சியாமளா, சிவசுதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-41-63)

# பிடியாணையில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 20

இளவாலைப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நீதிமன்ற வழக்குகளுக்குச் செல்லாது தலைமறைவாக இருந்த ஐவரை இளவாலைப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்தை, சில்லாலை, மாதகல், பிரான்பற்று ஆகிய இடங்களில் வழக்குகளுக்குச் செல்லாது தலைமறைவாகியிருந்த ஐவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

அதனையடுத்து பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# எந்தவொரு ஆக்கிரமிப்பையும் தமிழர்கள் தீர்க்கமாக எதிர்ப்பர்

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்துக்கு, 'திருவள்ளுவர் கலாசாரமையம்' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. திருவள்ளுவரைக் கௌரவிக்கும் விதமாக இந்தப் பெயர்மாற்றம் நிகழ்ந்துள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. திருவள்ளுவர் கௌரவிக்கப்படவேண்டியவர் என்பதில் இரண்டாவது கருத்து எவருக்கும் இல்லை. பொய்யாமொழிப் புலவரைப் போற்றுவதில் எந்த எதிர்ப்பும் தமிழர்களிடம் இல்லை. ஆனால், இந்தியா அண்மைக்காலமாக முன்னெடுத்துவரும் உலகளாவிய அரசியலுக்கும், யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம், 'திருவள்ளுவர் கலாசாரமையம்' என்று பெயர்மாற்றம் பெற்றமைக்கும் இடையில் திரைமறைவுத் தொடர்புகள் உள்ளனவா? என்ற சந்தேகம் தமிழரின் மனங்களில் வலுக்கவே செய்கின்றன.

தமிழகத்தில் தற்போது 'திருவள்ளுவர் காய்ச்சல்' பற்றிப்பிடித்திருக்கின்றது. 2000ஆம் ஆண்டில் அன்றைய முதல்வர் மு.கருணாநிதியால் குமரிமுனையில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான திருவள்ளுவர் சிலைக்கு இந்த வருடம் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் பெரும் நிதிச் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், 'உலகளவில் திருவள்ளுவரின் புகழைப் பரப்புவேன்' என்று பிரதமர் மோடியும் அண்மையில் தெரிவித்திருந்தார். இதையடுத்து, 'இந்தியாவுக்கு வெளியில் தமிழுக்கு அங்கீகாரம் தேடிக் கொடுத்து, 'தமிழகத்தில் தாமரையை மலரச் செய்வதில்மோடி முழுமூச்சுடன் உள்ளார்' என்று பலரும் விமர்சித்திருந்தனர். எனவே, யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம், 'திருவள்ளுவர் கலாசார மையம்' என்று மாற்றப்பட்டமையின் பின்னணியில் இந்தச் சதுரங்க நகர்த்தல் இருக்குமா? என்ற அச்சம் தமிழர்களிடம் தற்போது மேலிடவே செய்கின்றது.

எல்லாவற்றையும் விட, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சீனாவுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதனால், சில விட்டுக்கொடுப்புகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்குப் பாரதம் விரும்பியோ விரும்பாமலோ தள்ளப்பட்டுள்ளது. எனவே, 'யாழ்ப்பாணம்' என்ற அடையாளப்படுத்தலுடன் தொடர்புடைய பெயர்சிலவேளைகளில் கொழும்புக்குச் சங்கடங்களை ஏற்படுத்தலாம். ஆதலால், 'யாழ்ப்பாணம்' என்ற அடையாளப்படுத்தலைத் தவிர்ப்பதற்காக 'திருவள்ளுவர்' தெரிந்தெடுக்கப்பட்டிருக்கலாம் என்று ஐயம் கொண்டாலும் அதில் தப்பேதும் இல்லை.


வள்ளுவத்தை வாழ்வாகக் கொண்டவர்கள் தமிழர்கள். எனவே, பாரதம் மேற்கொண்டுள்ள பெயர் மாற்றத்தின் பின்னணி எந்தவொரு சதுரங்க நகர்வையும் கொண்டிராதது என்றால், அதைத் தமிழர்கள் வர வேற்கவே செய்வார்கள். மாறாக, மேற்குறிப்பிட்ட சந்தேகங்களின் அடிப்படையில் பெயர் மாற்றம் நிகழ்ந்திருந்தால், அதை எந்தச் சமரசமும் இல்லாமல் தமிழர்கள் எதிர்பார்கள். ஏனெனில் ஈழத்தமிழர்கள் ஆக்கிரமிப்புக்கு எதிரான மனோ நிலையுள்ளவர்கள். புத்தரைத் தமிழர்கள் எதிர்ப்பதில்லை. மாறாக புத்தர் மூலமான ஆக்கிரமிப்பைத்தான் எதிர்க்கின்றார்கள். அதுபோல்தான், ஆக்கிரமிப்பு மனோநிலை வள்ளு வராக வந்தாலும் சரி, இயேசுவாக வந்தாலும் சரி, அல்லாவாக வந்தாலும் சரி, சிவனாகவே வந்தாலும்சரி நாங்கள் தீர்க்கமாக எதிர்ப்போம். இங்கே நாங்கள் எதிர்ப்பது சித்தாந்தங்களைத்தான். மாறாக சிலை களையோ இறைகளையோ அல்ல. எனவே, யாழ்ப் பாணம் பண்பாட்டு மையத்துக்குள் வந்து புகுந்துள்ள வள்ளுவர் கொழும்பைத் திருப்திப்படுத்தவும், புதுடில்லியின் நிழலாகவும் வந்திருந்தால் நிச்சயம் எதிர்ப்போம். அவ்வளவே!.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஒருவன் பொய் சொல்கிறான் என்று தெரிந்த பின்னும் அவனிடம் "ஏன் பொய் சொன்னாய்" என்று கேட்பது முட்டாள்த்தனம் ஏனெனில் அவன் அதற்கும் பொய்தான் சொல்வான்.

– கண்ணதாசன் –





# இந்த ஆண்டில் மேலும் பணவீக்கம் உயரும்

மத்திய வங்கி ஆளுநர் ஆரூடம்

கொழும்பு, ஜன.20

இந்த ஆண்டு இலங்கையின் பணவீக்கம் மேலும் உயரக்கூடும். அதற்கமைய பணவீக்கத்தை 5 சதவீதத்தில் பேண எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தற்போதைய எதிர்மறைப் பணவீக்க விகிதம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் நேர்மறை நிலைகளை எட்டக்கூடும்.

கடந்த டிசெம்பரில் பணவீக்க விகிதம் 1.7 ஆக இருந்தது. இதற்கிடையில், நாட்டின் வட்டி விகிதங்கள் மேலும் குறைக்கப்படும்.

அதனுடன், சந்தைக்கும் பொது மக்களுக்கும் வழிகாட்ட ஒரு புதிய மாற்றுவிகிதம் அறிமுகப்படுத்தப்படும்.

பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பரிவர்த்தனைகளை எளிதாக்க டிஜிற்றல் கட்டணத்தளத்தை செயற்படுத்தவுள்ளோம் - என்றார். (ச-இ)

## பொலிஸார் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜன.20

புதிதாக 9ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள், போக்குவரத்துக் கட்டுப்பாடு, குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு ஆகிய பணிகளில் கடமையாற்ற அமர்த்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

இலஞ்ச ஊழல்

## 77 அரச ஊழியர்கள் கடந்த ஆண்டில் கைது



கடந்த 2024ஆம் ஆண்டில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் கீழ் 77 அரசாங்க ஊழியர்கள், இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி ஒழிப்பு ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட அரச ஊழியர்களில் அநேகமானோர் பொலிஸார் என்று தெரியவந்துள்ளது. அதேபோன்று கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இரு பஸ்கள் நேருக்குநேர் விபத்து

40 பேர் காயம்

கொழும்பு, ஜன.20

கந்தர - தலல்லப் பகுதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த விபத்தில் 40 பேர் காயமடைந்த நிலையில் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 6 பேர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறைப் பொதுமருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச-இ)

## வில்பத்து பூங்காவுக்கு செல்வதற்குத் தடை



கொழும்பு, ஜன.20

வில்பத்து தேசிய பூங்காவின் எளுவன்குளம் நுழைவுவாயில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது. அண்மையில் பெய்த கனமழையால் கலா ஓயா நிரம்பி வழிந்ததால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - தை - 08
21.01.2025
சுபநேரம் : 11.02 - 12.35
ராகுகாலம் : 03.35 - 05.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தைப்பொங்கல் உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-22-66)

# இடமாற்றங்களில் பாரபட்சம் தீர்வில்லாவிடின் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன.20**

**ஆசிரியர்களின் இடமாற்றங்களின் போது அரசியல் தலையீடுகள், பாரபட்சம் உள்ளிட்டவற்றைத் தவிர்ப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் தொடர்ச்சியான போராட்டத்தில் குதிப்போம் என்று இலங்கைத்தாய்மொழி ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**



இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் பொதுச்செயலாளர் சிறிகந்தனேசன் புயல்நேசன் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் ஆண்டுதோறும் இடமாற்றம் நடைபெறுகின்றது. இவ்வாறு நடைபெற்றாலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களிலே பணிசெய்து பாதிப்புக்குள்ளாகிவருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் ஐந்து வெளிமாவட்டச் சேவையை நிறைவு செய்த ஆசிரியர்கள் பலர் இருக்கின்றனர். இருப்பினும் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் நியமனம்பெற்ற ஆசிரியர்கள், வெளிமாவட்டச் சேவையை 8 அல்லது 10 வருடங்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். இதனால் அவர்கள் உள நெருக்கடிக்கும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளார்கள். இடமாற்றச்சபையிலே தீர்மானம் எடுக்கப்படுகின்ற போது தேசிய இடமாற்றக் கொள்கையை அடிப்படையாக வைத்து அதற்கேற்ப இந்த இடமாற்றம் வழங்கப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களிலும் அரசியல் சார்பான நடவடிக்கைகள் இடம்பெற்றன. இடமாற்றத்திலேயே அரசியல் சார்பாக தொழிற்சங்கங்கள் செயற்பட்டுக் கொண்டு அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களைப் பயன்படுத்தினார்கள். தற்போதைய அரசாங்கமும் அதற்கு விதிவிலக்கல்ல.

எனவே இதற்கு 14 நாள்களுக்குள் முறையான நடவடிக்கைகள் எடுக்காவிடின் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுப்பதோடு, யாழ்ப்பாணநகரில் வீதி ஊர்வலத்தையும் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார். (ச-27)

இந்தியமீனவர் அட்டூழியம்;

# சிறீதரன் தலைமையில் குழு பேச்சு நடத்த இந்தியாவுக்கு!





யாழ்ப்பாணம், ஜன.20

இந்திய இழுவைப்படகுகளின் எல்லைதாண்டிய அட்டூழியம் தொடர்ந்து வரும் நிலையில் அது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஊடாக 10 பேர் கொண்ட குழு இந்தியா செல்வதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு க.தொ.கூ.சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கைவிடுத்து வருகின்றோம். ஆனால், இதுவரை அவ்வாறு நிறுத்தப்படவில்லை. அந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஊடாக வடக்கு மாகாணத்திலிருந்து 10 பேர் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்குப் பேச்சு நடத்தச் செல்லவுள்ளது. கூடிய விரைவில் அது கைகூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-100)

# அரிசித் தட்டுப்பாட்டைத்தீர்க்க கூட்டுறவுச்சங்கங்கள் முன்வருக

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் எமது உணவுப் பாதுகாப்புக்கு அரிசி முக்கியமானதொன்றாகக் காணப்படுவதனால் சந்தையில் அரிசியின் விலையைத் தீர்மானிக்கும் சக்தியாகக் கூட்டுறவுச்சங்கங்கள் இருக்க வேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் செயலாளர் தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் எமக்குப் போதுமான அளவுக்கு அரிசி உற்பத்திசெய்யப்படுகின்றது. அதனை சந்தைக்கு விநியோகிப்பதில் உள்ள பிரச்சினையால் நுகர்வோருக்கு உரிய முறையில் சென்றடைவதில்லை.

நாட்டில் கூட்டுறவு முக்கியமான சமூக நிறுவனமாக செயற்படுகின்றது. எனவே விவசாயிகளின் வாழ்வாதாரத்தை விஸ்திரப்படுத்தி உணவு பாதுகாப்புக்காக நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி அரிசியாக விநியோகம் செய்யும் போது எதிர்காலத்தில் கூட்டுறவால் அரிசியின் விலையைச் சந்தையில் தீர்மானிக்கும் சக்தியாகவும் மாறமுடியும். தற்போதுள்ள 16 கூட்டுறவுகளின் அரிசி ஆலைகளும் முழுத்திறனில் இயங்குமானால் 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை உற்பத்தி செய்யமுடியும். இதனைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை கொள்வனவு செய்யவேண்டும் - என்றார். (ச-28)


# வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

கோப்பாய்ச்சந்தி வீதியில் ஏற்பட்ட சேதங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தார்க்கலவைமூலம்சீர்செய்யப் பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழையால் வீதியில் ஏற்பட்ட சேதங்களால் மக்கள் சிரமப்பட்டு வந்த நிலையில் குறித்த சேதங்கள் சீர்செய்யப் பட்டுள்ளன. (ச-40-17)





குருநகரில்

# பலத்த காற்றால் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜன.20

குருநகரில் நேற்றுக் காலை வீசிய பலத்த காற்றினால் வீடுகள் மற்றும் தேவாலயம் என்பன சேதமடைந்துள்ளன. 30 க்கு மேற்பட்ட வீடுகள் பகுதி அளவிலும் புனித கொலை விலக்கி மாதா ஆலய அறைகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. அத்தோடு சில படகுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ச-27)

# மாநகரசபைக்கான கட்டடம் முழுமையாகக் கையளிக்குக

## ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்.மாநகரசபையின் புதிய கட்டடத்தை முழுமையாக வழங்குகின்றபோதே சேவைகளை முன்னெடுக்கலாம். கீழ்த் தளத்தை மாத்திரம் நகர அபிவிருத்தி அதிகாரசபை கையளித்தாலும் எம்மால் அங்கு செயற்படமுடியாது என யாழ்.மாநகரசபை ஆணையாளர் கிருஸ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாநகரசபையின் புதிய கட்டடம் எப்பொழுது கையளிக்கப்படும் என அர்ச்சுனா எம்.பி. எழுப்பிய கேள்விக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் அதன் கீழ்த் தள வேலைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மாநகரசபையிடம் கையளிக்கப்படும் என நகர அபிவிருத்தி அதி காரசபையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துத் தற்போது மாநகரசபை ஆணையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, மாநகரசபையிடம் 27 கிளைகளின் கீழ் பல்வேறுபட்ட சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக அமைக்கப்படும் மாநகர சபையின் கட்டடத்தின் கீழ்த் தளத்தில் மூன்று கிளைகளை மாத்திரமே நடத்த முடியும். முழுமையாக வழங்கப்படுகின்ற பொழுதே அனைத்து கிளைகளையும் உள்ளடக்க முடியும் - என்றார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகள் தேவை

1. யாழ்ப்பாணம், Roman Catholic குருகுலம், 1989, மூலம், Master Degeree, Engineer, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
2. நல்லூர், இந்து விஸ்வகுலம், 1987, அத்தம், BA, (Hons), FIPA, FFA, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
3. யாழ்ப்பாணம், இந்து விஸ்வகுலம், 1988, சுவாதி, Quantity Surveyor UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
4. K.K.S. மாவிட்டபுரம், இந்து கௌரவகுலம் (K), 1988 ரோகினி, MSc, France Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
5. பளை, இந்து கௌரவகுலம் (K), 1990, உத்திரட்டாதி Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
6. கந்தர்மடம், இந்து, கௌரவகுலம்.(V), 1989 உத்திராடம், MSc, Cannada மணமகனுக்கு மணமகள் தேவை.
7. உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம், (V), 1990, உத்திரட்டாதி, Phd, Civil Engineer, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
8. சண்டிலிப்பாய் - தெல்லிப்பளை. இந்து, கௌரவகுலம் (V), 1988 பூரட்டாதி, MBA, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
9. காரைநகர், இந்து கௌரவகுலம், (V),1986, உத்திராடம், Air Space Engineering, USA Citizen மணமகனுக்கு மண!மகள் தேவை.

எம்மிடம் எல்லா ஜாதியிலும், மணப் பெண், மாப்பிள்ளை உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் Unmarried, Divorce என்பனவும் உண்டு.

S.Sharma J.P.
www.thaalee.com
திருமண சேவை

077 539 3728
whatsap: 077 803 8193

(cs.57255)(N-1)

## தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

**இணைந்த கணிதம் - 2026 A/L**
**2025 A/L (துரிதமீட்டல்)**
**கணிதம் - தரம் - 9,10,11**

தங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்

**T.P.: 077 113 1170**

(cs.57251) (N-1)

**Jaffna College Alumni Association**
**Postponement of the Annual General Meeting**

The Annual General Meeting (AGM) of the Jaffna College Alumni Association (JCAA) previously scheduled for the 25th of January 2025 has been postponed.

**THE NEW DATE IS SATURDAY, 8 FEBRUARY 2025.**

The meeting will commence at 9.30 a.m. in Ottley Hall. There is no change in the agenda sent to the members.

The decision to postpone the AGM was made in view of the 'Saiva Paripaalana Sabai Examination' scheduled to be held on the 25th of January 2025 in the school premises.

Any inconvenience caused to the members due to this change is deeply regretted.

Mrs. J. Paheerathan
Secretary/ Jaffna College Alumni Association
20 January 2025

*யாழ்ப்பாணம் குப்பிழானில்*

# திடீர் சுகவீனம்: ஒருவர் இறப்பு!

*யாழ்ப்பாணம், ஜன. 20*

யாழ்ப்பாணம் குப்பிழானில் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார். பாலகிருஷ்ணன் சசிகுமார் (வயது-42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். குறித்த குடும்பத்தலைவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் கனடாவில் வசித்து வருகின்றனர். ஆதலால், அந்த நபர் தனிமையிலேயே வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் அவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார். (ம-66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 • 07 • 1942



மறைவு
19 • 01 • 2025

## கந்தாசாமி பராசக்தி

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வீணியவரை அம்மன் கோவலடி மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பராசக்தி நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவகர்ளான காசிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, அன்னபூரணி, இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காசிப்பிள்ளை, சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், திருக்குமாரன், திருக்குமாரி (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் செல்வன்குமார் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), உதயகுமாரி, கமலகுமாரி, பாலகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரன், காலஞ்சென்ற சற்குணதேவி ஆகியோரின் அன்பு மாமியும், சரவணகுமாரன், மயூரன், ஜெனா, பரீசன், மேருஜா, வருணேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை வீதி, மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**வீணியவரை,**
**அம்மன் கோவிலடி,**
**மாவிட்டபுரம், தெல்லிப்பழை.**

செல்வன்குமார் 076 195 3808
[illegible]
பாலகுமாரி 077 390 8984

(cs.57269) (N-1)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்**

உரிமையாளர் பெயர் :- மனோரஞ்சன் கம்சாநந்தி
விண்ணப்பதாரர் பெயர் :- மனோரஞ்சன் கம்சாநந்தி
முகவரி :- அழகிரி, அளவெட்டி மத்தி, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, சதானந்தா வீதியில் ஆதன இல. 8 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "அலவத்தை" என்ற ஆதனம் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு சண்முகலிங்கம் தேவகி முகதாவில் 2021.02.09ம் திகதியில் 332ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அளவெட்டி இறையில் அமைந்துள்ள "அலவத்தை" நிலப்பரப்பு 05 ஆனால் இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பா. சண்முகநாதனின் 1520ஆம் இலக்க 2015.09.21 ஆம் திகதியில் நிலஅளவுத்திட்டத்தின் படி நிலப்பரப்பு 07 குழி 1.77 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரை வந்தடைந்துள்ளது. 332 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதியாக பிரசித்த நொத்தாரிசு இ. யோகேஸ்வரன் முகதாவில் 1865 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவ் உறுதி மூலம் இவ் ஆதனத்தை விண்ணப்பதாருக்கு நன்கொடையளித்த அழகரட்ணம் மனோரஞ்சன் என்பவரை வந்தடைந்துள்ளது. மேற்குறித்த 332 ம், 1865 ம் இலக்க உறுதிகள் யாழ்ப்பாண காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள G$1/115 இலக்க இருமடித்தாளின் பிரதியினையும் எமக்கு சமர்ப்பித்துள்ளார்கள்.

குறித்த ஆதனம் 1865 ஆம் இலக்க உறுதியில் அதன் தாயுறுதியாக 1979.09.07 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வ. தம்பிப்பிள்ளை முகதாவில் 3374 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன அறுதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த 3374ம் இலக்க உறுதி மூலம் குறித்த ஆதனம் சிவநாதன் கைம்பெண் மாலினி என்பவரை வந்தடைந்து அவரது இறப்பின் பின் 3 பிள்ளைகளையும் பிள்ளைப் பங்குகளாக வந்தடைந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 1865 ஆம் இலக்க உறுதி மூலம் சிவநாதன் கைம்பெண் மாலினியின் பிள்ளைகளான சிவநாதன் ஷிவாங்கர், சிவநாதன் உஷாங்கர், சிவநாதன் நிஷாங்கர் ஆகியோரால் அழகரட்ணம் மனோரஞ்சனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த பிரசித்த நொத்தாரிசு வ. தம்பிப்பிள்ளை முகதாவில் 1979.09.07ம் திகதியில் நிறைவேறிய 3374ம் இலக்க உறுதியும் குறித்த உறுதி யாழ்ப்பாண காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள H568/35 இலக்க காணிப்பதிவுப் புத்தக பிரதியும் இவ் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்துள்ளார். மேலும் குறித்த ஆதனத்தின் விஸ்தீரணம் 3374ஆம் 1865ஆம் இலக்க உறுதிகளில் குறித்த அளவை விட 332 ஆம் இலக்க உறுதியில் ஆதன விஸ்தீரமானது பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

எனவே காணியின் விஸ்தீரணமானது இவ் ஆதனத்தின் முந்திய உறுதிகள் மற்றும் காணிப்பதிகைப் பதிவேடுகளில் குறித்த அளவிலும் விட தற்போது பாரிய மாறுபாடுள்ளதாகக் காணப்படுகின்றது. மேலும் ஆவணங்களிலிருந்து காணியின் விஸ்தீரண அதிகரிப்பு தொடர்பில் கண்டறிய இயலாதுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று, அளவெட்டி இறை "அலவத்தை" நிலப்பரப்பு ஐந்து ஆனால் இத உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். சண்முகநாதன் அவர்களால் 21.09.2015 ஆம் திகதியிட்டு 1520 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் பிரகாரம் அளவுப்படி துண்டு 1 ஆகக்காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு ஏழும் குளி ஒன்று தசம் ஏழு ஏழும் (நிலபர 07 குளி 1.77) விடும்

### இதற்கு எல்லைகள்

கிழக்கு : தாமோதரம்பிள்ளை தையல்நாயகியின் ஆதனமும், கைலநாதன் மனைவி நளினியின் ஆதனமும்
வடக்கு : கந்தையா மனைவி நாகம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம்
மேற்கு : சதானந்தா வித்தியாசாலைக்குரிய ஆதனம்
தெற்கு : ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் மேற்கெல்லையாக வடக்கெல்லைக் காணிக்கு இதன் தெற்கெல்லை ஒழுங்கையிலிருந்து செல்ல நான்கு முழ அகலமான பாதை உரித்து புறநீங்கலாக மிகுதி முழுவதும் அதற்குரியவையும்

இவ்வாதனம் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் வரும் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் தெல்லிப்பளை, அளவெட்டி மத்தி J/216 கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ளதாகும்.

மேற்குறித்த ஆதனத்தை மனோரஞ்சன் கம்சாநந்தி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மனோரஞ்சன் கம்சாநந்தி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(cs 57284) n -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 03.03.1934 மறைவு 21.12.2024

அமரர்

## கந்தையா நல்லம்மா

தாய்க்கு தாயாக
தன்னலமின்றி எமைக்காத்த பாசத்தின்
- உறைவிடமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்

(cr 44139) (N-1)

# மரண அறிவித்தல்



கர்த்தரின் படைப்பு 17 . 09 . 1953

கர்த்தரின் அழைப்பு 18 . 01 . 2025

## ஜோசப் சுசீலா

பருத்தித்துறை தும்பளையை பிறப்பிடாகவும் மாகியப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட ஜோசப் சுசீலா நேற்றுமுன்தினம் (18.01.2025) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இரத்தினவதி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பையா போல் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், த.ஜோசேப் (ஜெகோ) அவர்களின் மனைவியும், தியோடோரா, டொறத்தி (லண்டன்), ஜீவசுதா, தர்ஷா, மயூரன், ஜெஸ்மர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநாதன் (ராஜா), கனீந்திராஜ் (லண்டன்), சிவராஜ், ஆனந்தி, பிரமிளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரசாத் - நிட்டாரா, லக்ஷி - சந்திக பேர்னான்டோ, லக்கி, லக்ஷா, மேஷாக், யாழினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜேக்கப் சட்விக் இன் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.01.2025) செவ்வாய்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி அமெரிக்கன் சிலோன் மிசன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 651 0777, 077 638 1747
076 211 7743 , 075 0559 601

(cs.57272) (N-1)

# மின்கட்டணத் திருத்தம் அரசாங்கம் நாடகமே

அண்மைய மின்சாரக் கட்டணக் குறைப்புக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொய்யாகக் நற்பெயரைப் பெற முயல்வதாக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுதந்திரமாகக் கட்டணங்களைக் குறைக்க முடிவு செய்ததே தவிர அதை அரசாங்கம் செய்யவில்லை.

அத்தகைய கட்டணக் குறைப்பு சாத்தியமில்லை என எரிசக்தி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஒரு ஜே.வி.பி. தலைவர்கூட மின்சாரக்கட்டணத்தைக் குறைக்க வலியுறுத்திப் பேசவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பாவற்குளத்தின் 4 வான்கதவுகள் நேற்றுத் திறப்பு!

## மக்களே அவதானம்


வவுனியா, ஜன. 20

அளவுக்கு அதிக நீர்வரத்துக் காரணமாக பாவற்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஆதலால், பொது மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது. இதையடுத்தே பாவற்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையால், மேலும் பல வான்கதவுகள் திறக்கப்படும் சாத்தியங்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவற்குளத்தில் நீர்வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5, 6, 4, 2, 1, வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களும், நெளுக்குளம் நேரியகுளம் வீதி ஊடாக பயணிப்பவர்களும் கூடுதல் அவதானமாக போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. (ம-110)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 06 . 1932

மறைவு 14 . 01 . 2023

## அமரர் தியாகராசா சிவயோகம்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்று
இரண்டாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

மானிப்பாய் றோட்,
ஆனைக்கோட்டை.

(cs.2245) (N-1)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 12 . 1953

மறைவு 19 . 01 . 2025

## விவேகானந்தன் இராசமணி

கலைமணி வீதி, கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விவேகானந்தன் இராசமணி நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், திரு.திருமதி கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகலிங்கம் விவேகானந்தனின் பாசமிகு மனைவியும், குமணன், நிரோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கவிப்பிரியாவின் அன்பு மாமியாரும், புருஷோத், பிரணீத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சின்னையா, பொன்னம்பலம், சிவலிங்கம் மற்றும் பூமணி, பூலோகரம்பபை, லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, மனோன்மணி, பாலசிங்கம் மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, குணதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமணி வீதி,
கட்டைப்பிராய்.

(cs.57267) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.
077 469 7299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பித்தது ரணிலின் ஆட்டம்: நிழல்நாடாளுமன்றம்அமைப்பு?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில், நிழல் நாடாளுமன்றத்தையும், அமைச்சரவையையும் அமைப்பதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து, தற்போதைய நாடாளுமன்றத்தில் இடம்பெறாத அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிழல் நாடாளுமன்றத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது. நிகழ் அமைச்சரவை இன்னும் இறுதிப்படுத்தவில்லை. ஆனால், அதற்குரிய பணிகள் இடம்பெறுகின்றன என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

குறித்த நிழல் நாடாளுமன்றத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதிகள் அழைக்கப்படவுள்ளனர் எனவும், கருத்துரைகளை ஆற்றுவதற்காக உலகத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. (ம-44)

# அலங்கார உற்சவம்!

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பால் குட அபிஷேகத்துடன் கற்பூர திருவிழாவும், 22 ஆம் திகதி புதன்கிழமை சுமங்கலி பூஜையும், 23ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும், 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை குடமுழுக்கு உற்சவமும், 25ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவன திருவிழாவும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டை திருவிழாவும், 27ஆம் திகதி திங்கட்கிழமை சப்பற திருவிழாவும், 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும், 29ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ச-100)

# சங்காபிகேம்

யாழ்ப்பாணம், ஜன.20

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ச)

RIVER BRAND
OVER 100 YEARS OF NATION BUILDING
THORN

உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான 100 வருட அனுபவம் உடைய உயர்தர உற்பத்திகளை கொண்ட N. வைத்திலிங்கம் & கம்பனி மீண்டும் யாழ்மண்ணில் இன்று (20.01.2025) திங்கட்கிழமை கிளையை திறந்து உங்களுக்கு சேவையாற்ற தொடங்குகிறது!!!

இடம்
155, STANLEY ROAD, JAFFNA

திகதி
JANUARY 20, 2025 (TODAY)

N. VAITILINGAM & CO. (PVT) LTD.
T.P – 021 2050954 / 021 2050 948 / 0114 399 433
E mail: Jaffna@nvclgroup.com
www.nvclgroup.com




யாழ்.அரியாலை வெட்டுக்குளம்
அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
1008 சங்காபிஷேக
பெருவிழா



குரோதி வருடம் தை மாதம்
07 ஆம் நாள் 20.01.2025 திங்கட்கிழமை

கலைமகளே கற்றவர்கள் கருதி னிறைபவளே
அலைமகளே வெட்டுக் குளத்தரசி மலைமகளே
புன்னெறி செல்லும் புழுத்தலைப் புலையனேற்கு
நன்னெறியே யென்றுநிலை நாட்டு



அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் தை மாதம் 07 ஆம் நாள் (20.01.2025) திங்கட்கிழமை தேய்பிறை ஷஷ்டி திதியும் அத்தநட்சத்திரமும் கூடிய சுபவேளையில் அம்பாளுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் செய்ய திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அனைத்து கிரியைகளிலும் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக.

கிரியாகால நிகழ்வுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ◆ காலை | 6.00 | மணி | பூசை | மாலை | 5.30 | மணி | விஷேட பூசை |
| ◆ காலை | 8.00 | மணி | புண்ணியவாசம் | மாலை | 6.00 | மணி | வசந்த மண்டபபூசை |
| ◆ காலை | 8.30 | மணி | யாகபூசை | மாலை | 6.20 | மணி | திருவூஞ்சல் |
| ◆ காலை | 9.30 | மணி | அபிஷேக பூசை | இரவு | 7.00 | மணி | அம்பாள் கிராமப் பிரவேசம் |
| ◆ காலை | 11.00 | மணி | சங்காபிஷேகம் | நள்ளிரவு | 12.00 | மணி | பிராயச்சித்த அபிஷேகம் |
| ◆ காலை | 11.30 | மணி | விஷேட பூசை | | | | |

அதனைத் தொடர்ந்து மதியம் இடம்பெறும் மாகேசுவர பூசையிலும் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்

ஆலய அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ சண்முகமாதுளசர்மா

சிவாஹம கிரியா ஜோதி
சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள் (முள்ளியவளை)

அம்பாளின் கிராமப் பிரவேச வீதியுலா நடைபெறும்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"


தேவஸ்தான பரிபாலன சபையினர்
அரியாலைவெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.

பிரசுர அன்பளிப்பு:
புலம்பெயர் வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 05 . 1947



மறைவு
18 . 01 . 2025

## சந்தியாப்பிள்ளை மரியதாஸ்

(உரிமையாளர் - கெனடி வோர்ச் வேக்ஸ் - பிரதான வீதி)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை மரியதாஸ் நேற்றுமுன்தினம் (18.01.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மரினா கமலாவின் அன்புக் கணவரும், பொணி பிரான்சிஸ் (உரிமையாளர் - கெனடி வோர்ச் வேக்ஸ் - திருநெல்வேலி), ஆன் மொனிக்கா (ஆசிரியர் - யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), ரவி அன்ரனி (பிரான்ஸ்), ஆன் டயானா (வவுனியா), றொனி மைக்கல் (போதகர் - நாற்சதுர சுவிசேஷ சபை), போல் நியூமன் (வடமாகாண விற்பனை முகாமையாளர், டெல்மேஜ் கம்பனி), நிரோஜினி, றொமேஸ் (உப அதிபர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), சுரேஸ் (உரிமையாளர் - கானா ரெஸ்ரோரன்ட்), தர்சினி (பிரான்ஸ்), நளினி, சாளினி ஆகியோரின் அன்பு மாமனும், ஜலீன், ஜெனோஷன், மைக்கலின், மக்சன், திரோன், அடினா, றோமன், யூலியா, லேயா, செகினா, ரீசா, எல்வின், அனேஹறா, அஹறாரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அக்கினேசம்மா, மரியாம்பிள்ளை (கெனடி) மற்றும் பிறிஜிட், கைடி பொன்கலன், காலஞ்சென்ற ஜோசப் கிறிங்கில்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (20.01.2025) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சில்லாலை தூய கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், தூய கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**(நல்லூர் பிரதேசசபை ஒழுங்கை)**

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 724 0796**

(Cs 57258) N-1

# வாக்குறுதியை நிறைவேற்றாவிடின் மக்கள் போராட்டம் வெடிக்கும்

*தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவிப்பு*



கொழும்பு, ஜன.20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்துவருகின்றது. அவர்கள் வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிடின் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு பல உறுதிமொழிகளை வழங்கியது. அந்தக் கட்சியினர் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆனால் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தேங்காய் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணம் என்பன குறைக்கப்படும் எனக் கூறப்பட்டது. அதுவும் நடக்கவில்லை. மின்சாரக் கட்டணத்தைக்கூட பொதுபயன்பாட்டு ஆணைக்குழுதான் குறைத்துள்ளது. அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை அவதானித்து வருகின்றோம். எனவே வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றாவிடின் வீதியில் இறங்கிப் போராடவும் தயங்கமாட்டோம் - என்றார்.

(ச-44)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
22.01.1940

மறைவு
19.01.2025

எமது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் முன்னைய நிர்வாக சபைகளில் பல தடவை (**பொருளாளராக**) கடமையாற்றிய

**மயில்வாகனம் கதிர்காமநாதன்**


அவர்களுக்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குவதோடு குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**106 வது அரியாலை**
**சுதேசிய திருநாட் கொண்டாட்ட சபை**

(CS 2325)V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 10 . 1942



மறைவு
19 . 01 . 2025

## பொன்னையா தர்மலிங்கம்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மலிங்கம்அவர்கள் நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசபூபதி அவர்களின் பாசமிகு கணவரும், சுமங்கலா (இலங்கை வங்கி தலைமை அலுவலகம் கொழும்பு), துளசிதாசன் (லண்டன்), பிறேமிலா (சமூக சேவைகள் திணைக்களம் வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், ரூபகுமார் (மாவட்ட செயலகம்-கிளிநொச்சி), சுகந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, மாதுஷா, தாருஜன், பானுஜன், டினுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பரசாமி மற்றும் கதிரவேலு காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சந்திரசேகரம், குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


**கயிலாயபிள்ளை வீதி,**
**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**

தகவல் :
**குடும்பத்தினர்.**

(CR 4440) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 03 . 1943



மறைவு
19 . 01 . 2025

## கனகசபை கணேசமூர்த்தி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கணேசமூர்த்தி அவர்கள் நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணி அவர்களின் பாசமிகு கணவரும் கோணேசமூர்த்தி, கோபிதாசன், ரேவதி, தாரணி, மோகனதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சினி, உமாலினி, தேவேந்திரன், செல்வச்சந்திரன், தேசிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் திருஸ்தன், தைசோன், நடனசபேசன், துவாரகன், ஜதுமதி, நிரஜா, ஜானுயன், பகலவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சடாச்சரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் மகேந்திரம், பரமேஸ்வரி, சர்வேஸ்வரி, தர்மேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நுணாவில் காந்தாளம் பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 120 9996**

(CS 2321) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, யாழ்ப்பாணம் மாவட்ட போதைத்தடுப்புப் பிரிவினரால் அந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## படையினரின்...

களுத்துறையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட பொலிஸாரின் தலைமீட்டுடன் இலங்கை வரலாற்றில் அதிகளவான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுவருகின்றன. பணம் மற்றும் ஆயுதங்கள் என்பனவும் மீட்கப்பட்டுவருகின்றன.

நாட்டிலுள்ள பயங்கரமானதொரு நிலை தொடர்பான தகவலொன்றை வெளியிடுகின்றேன். இராணுவமுகாம்களில் உள்ள ஆயுதங்கள் வெளியில் வந்துள்ளன. குறிப்பாக இராணுவ முகாமொன்றிலிருந்து ரி56 ரக துப்பாக்கிகள் 73 பாதாள குழுக்கள் வசம் சென்றுள்ளன. அவற்றில் 38 துப்பாக்கிகளை நாம் மீளக் கைப்பற்றியுள்ளோம். எஞ்சிய 35 துப்பாக்கிகளைத் தேடிவருகின்றோம்.

இராணுவத்தில் சிறப்பாகச் செயற்படக்கூடிய, புகழ்பெற்ற அதிகாரிகள் இருக்கும் நிலையில், பாதாளக் குழுக்களுக்காக வேலைசெய்யும் சிலரும் இருக்கவே செய்கின்றனர். பாதாள குழுவிடம் பணத்தைப் பெற்றுவிட்டு சூடுநடத்திவிட்டு முகாம்களுக்குள் செல்பவர்களும் இருக்கின்றனர். இப்படியான 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாதாளக் குழுக்களுக்கு இடமில்லை. எல்லாவற்றையும் நாம் சுத்தம் செய்வோம். அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிஸார் இருக்கின்றனர். அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (அ-ம-44)

## மஹிந்தவின்...

அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வீடு வழங்கப்படமாட்டாது என உறுதியளித்திருந்தோம். எதிர்காலத்தில் எனக்கும் வீடொன்று தேவையில்லை என தற்போதே கடிதம் வழங்கக்கூட நான் தயார். மஹிந்த ராஜபக்ச தற்போது தங்கியுள்ள வீட்டின் பெறுமதி தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்டது. வீடு மாத்திரம் மதிப்பிடப்பட்டுள்ளது. காணி இன்னும் மதிப்பிடப்படவில்லை. வீட்டுக்குரிய மாத வாடகை 46 லட்சம் ரூபாவாகும்.

சட்டத்தின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிக்கு வீடொன்று வழங்கப்படவேண்டும், அவ்வாறு இல்லையேல் சம்பளத்தில் மூன்றிலொரு பங்கு வழங்கப்படவேண்டும். நாம் வீட்டைப் பெறுவோம். சம்பளத்தில் மூன்றிலொரு பங்கான 30 ஆயிரம் ரூபாவை வழங்குவோம். அவ்வாறு இல்லையேல் மிகுதிக் கட்டணத்தை மாதாந்த நிலுவையாக செலுத்திவிட்டு அங்கு அவர் தங்கி இருக்கலாம். வாடகையைச் செலுத்தாவிட்டால் அவர் வெளியேறவேண்டிவரும் - என்றார். (அ-ம-44)

## முன்னாள் எம்.பி...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்படவுள்ளது. அத்துடன், இனிவரும் நாள்களில் நாடாளுமன்ற உணவகத்தில் சலுகை விலையில் உணவுகள் வழங்கப்படாது. வெளியில் என்ன விலைக்கு பொதுமக்களுக்கு உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றனவோ, அதே விலைக்குத்தான் நாடாளுமன்ற உணவகங்களிலும் உணவுகளைப் பெறக்கூடியதாக இருக்கும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள உணவகங்களில் மானிய விலையிலேயே இதுவரை உணவு வழங்கப்பட்டுவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## பொலிஸ்...

களின் அடிப்படையில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாக இருந்துவந்த வல்வெட்டித்துறை, தீருவில் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் சந்திரபாலன் (வயது-45) என்பவர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் திடீர் சுகவீனமுற்றதைத் தொடர்ந்து ஊறணி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலையில், அங்கு சென்ற பருத்தித்துறை பதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைத்து, உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

சடலத்தின் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று இடம்பெற்ற நிலையிலேயே, ஒருவகை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டமையால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிகப் பகுப்பாய்வு நடவடிக்கைக்காக மாதிரிகள் பெறப்பட்டு அவை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (அ-ம-100-26)

## அதிகாரத்தை...

யர் தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார். முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் புதிய தலைமையகத்திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரம் செலுத்துவதற்காக அதிகாரத்தைப் பெறக்கூடாது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே அதிகாரத்தைப் பெறவேண்டும். சிலர் அதிகாரம் செலுத்துவதற்காகவே அதிகாரத்தைப் பெறுவதால் இந்த விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கவேண்டியுள்ளது. அதிகாரம் என்பது அதிகாரத்துக்கானது அல்ல என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதிகாரம் என்பது நாட்டுக்கானது.

அதேபோல அதிகாரம் என்பது கைவிடுதற்கோ அல்லது பகிர்வதற்கோ அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் பகிர்ந்த பின்னர் அதிகாரம் இருக்காது. எனவே, அதிகாரம் என்பதை அதிகரித்துக்கொள்ள வேண்டும். வளங்கள் மற்றும் சேவைகளைத்தான் பகிரவேண்டும். நாட்டை பிரிக்கக்கூடாது. அதிகாரத்தைப் பிரிக்க கூடாது. நாடும், அதிகாரமும் ஒன்றாகும் - என்றார். (அ-ம-44)

## முன்னாள்...

ளார். சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று ஹப்புத்தளைப் பகுதியில் கடந்த மாதம் கைப்பற்றப்பட்டிருந்தது. அந்த வாகனம் முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவுக்குச் சொந்தமானது என்ற விடயம் தெரியவந்ததைத் தொடர்ந்து, அவர் கடந்த 14ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இதைத் தொடர்ந்தே அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-இ)

## இ.போ.ச...

போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பேருந்து, நுணாவில் மேற்குப் பகுதியில் நேற்றுப் பழுதடைந்து நின்றுவிட்டது. மாலை 4 மணியளவில் பேருந்து பழுதடைந்த போதிலும் இரவு 7 மணியாகியும் மாற்று ஏற்பாடுகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ் சாலையால் மேற்கொள்ளப்படவில்லை.

இதையடுத்தே, ஏ9 வீதியால் சென்ற வாகனங்களை மறித்து பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். பொலிஸாரின் தலையீட்டைத் தொடர்ந்தே போராட்டம் கைவிடப்பட்டதுடன், போக்குவரத்துக்கான மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. (அ-ம-28)

## அரச...

பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்தசில வருடங்களுக்கு முன்னர் இந்தக் காணி விற்பனை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இதையடுத்தே சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. (அ-ம-110)

## சிரேஷ்ட...

இவர், இலங்கை ஊடகங்களில் ஒரு முக்கியமான நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தியிருந்தார். 1971ஆம் ஆண்டு இளைஞர் கிளர்ச்சி தொடர்பான பிரதான நீதிமன்ற வழக்கில் அவர் 7ஆவது குற்றவாளியாக இருந்தார். விசாரணையின் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிறைவாசத்தின்போது அவர் ஜே.வி.பி. சார்பான கொள்கையையும், மார்க்ஸியக் கோட்பாட்டையும் கைவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## ஜனவரி...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்வார் என்றும் கூறப்படுகின்றது. எனினும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளிவரவில்லை. (அ-ம-125)

## சீனாவின்...

தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே, சீனாவின் முதலீடுகள் மற்றும், சீனத் தூதுவரின் உள்ளக விவகாரத் தலையீடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்புவதில் இந்தியா ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இந்தியா தொடர்ந்தும் செயற்படும். இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒரு பிரதேசத்தின் அல்லது ஒரு நாட்டின் எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தியை அடைவதே இலக்காகும். இந்தியாவைப்போன்றே அமெரிக்கா, மேற்குலக நாடுகள் ஆகியனவும் செயற்படுகின்றன.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில் அவர்களின் முதலீட்டுத் திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்படுவதோடு அவை நிலைபேறான இலக்குகளை பெரிதாக மையப்படுத்துவதில்லை. ஆகவே சீனாவின் நிலைபேறற்ற முதலீடுகள் எந்தவொரு நாட்டையும் அதீத மான கடன்சுமைக்குள்ளேயே கொண்டு செல்லும்.

இலங்கைக்கான சீனத்தூதுவர் யாழ்ப்பாணத்தில் வைத்து, 'ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் வாக்களித்தமையை வரவேற்கின்றேன்' என்று கூறியிருந்தமை தவறான முன்னுதாரணமாகும். தூதுவர்கள் தூதரக நெறிமுறைகளின் மற்றும் இராஜதந்திர வரைமுறைகளின் அடிப்படையில் மக்களாணை தொடர்பில் கருத்துக்கூற முடியாது. அவ்வாறு கூறினால், அது வொரு உள்ளகத் தலையீடு - என்றார்.


குறித்த சந்திப்பின்போது, ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கத்தில் ராஜபக்சக்களை விடவும் படுமோசமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 11 . 1950

மறைவு 19 . 01 . 2025



## திருவாளர் நரசிங்கம் தங்கவேலு

(பழைய மாணவன் - கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம். முன்னை நாள் ஊழியர் - PWD )

மாவை கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் நரசிங்கம் தங்கவேலு நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - வைரி தம்பதியரின் ஆசை மகனும். காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும். செல்லக்கிளியின் (கிளி) அன்புக் கணவரும். ஜெகதீபா. இளங்குமரன். திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்றவர்களான வெற்றிவேலன். சரஸ்வதி மற்றும் மாரிமுத்து. வரதராசா (சின்ராசு) ஆகியோரின் அன்புச் சகோதரனும். விஜயனின அன்பு மாமனாரும். கஜானா. லோஜினி. கேனிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவல் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மண் வாய்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மகன்மார் : - 076 684 2157
: - 076 667 7623

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.57270) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 04 . 1941

மறைவு 19 . 01 . 2025



## பசுபதி சந்திரசேகரம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்-யா/ கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை)

நெடுந்தீவு கிழக்கு. நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு. சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி சந்திரசேகரம் அவர்கள் நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த பசுபதி-அன்னா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நுணாவில் மேற்கு. சாவகச்சேரியைச் சேர்ந்த முருகேசு-பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் விக்கினேஸ்வரி (ஓய்வு நிலை ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், இராமச்சந்திரன், லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிறிஸ்ரி கபிலன் (ஐக்கிய இராச்சியம்), மிதிலன் (அவுஸ்திரேலியா), சகிலா (ஆசிரியை. யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), சஞ்சுகன் (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியா. அலிசன். வலன்ரைன் தினேஸ் (தொழில்நுட்பவியல் கல்லூரி கொக்குவில்), அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திக், கிரிசன், சார்லட் தமிழினி, கிறிஸ்ரி கவினன், காவியா, கேசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நுணாவில் மேற்கு சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (21.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ் வீதி, 1ம் ஒழுங்கை,
(நுணாவில் பொது நூலகம் முன்பாக)
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 672 8386, 077 847 7840

(CS 2324)P-1

## கொள்கலன்கள் விடுவிப்பு


பிரதான முனையத்தி லிருந்து, 2 ஆயிரத்து 293 கொள்கலன்கள் ஒரேநாளில் விடுவிக்கப் பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. இருப்பினும் கொள்கலன் நெரிசல் குறையவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(ச-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 . 12 . 1942

மறைவு 01 . 02 . 2024



அமரர் திருமதி

## வள்ளிநாயகி கந்தசாமித்துரை (கிண்ணியம்மா)

கடந்த (01.02.2024) இறைவனடி சேர்ந்த எங்களது அன்புத் தாயாரின் முதலாம் ஆண்டு திவசமானது இன்று (20.01.2025) திங்கட்கிழமை அவரது வேம்படி வல்வெட்டித்துறை இல்லத்தில் நடைபெறும்.

இன்றைய தினம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்படி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.
071 321 6996

(cs.51150) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 01 . 1940

மறைவு 19 . 01 . 2025



## மயில்வாகனம் கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் யாழ் - செயலகம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கதிர்காமநாதன் நேற்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பாளின் அன்புக் கணவரும், சியாமா, மகிந்தன், சுகந்தன் ஆகியோரின் அன்பு தந்தையும், தர்மினி, சத்தியபாமா ஆகியோரின் மாமனாரும், சுகணா, தமிழினியன், குயிலினியன், தனுசிகா, திவாகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, மகேஷ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், யோகராசா மற்றும் புஸ்பராணி, தில்லைநாயகி, ஜெயரட்ணம், டிபாலதாஸ், காலஞ்சென்ற வசந்தி ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம், காலஞ்செனற்வர்களான கனகசிங்கம், பத்மா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2025) திங்கட்கிழமை நண்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

கண்டி வீதி,
(தபால் கட்டை சந்திக்கு அருகில்)
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(Cs 57258) N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் 20.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.